**அசல் வழக்கு எண். 14/2020**

29.10.2024

**பெயர் – ஜெயக்குமாரி க/பெ.சின்னச்சாமி (Pw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(1) தாவாச் சொத்தை எனது கணவர் எனக்கு 2012 ம் ஆண்டு வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்த காலத்திற்கு முன்பு எனது கணவர் பெயரில் உள்ள தனிப்பட்டா எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு பின்னிட்டு தாவாச் சொத்திற்கு எனது பெயரில் தனிப்பட்டா பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் பெயரில் பட்டா மாற்றியுள்ளேன் இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்று ஞாபகம் இல்லை. பு.ஏ.6.09 பூமி முழுவதும் நான், பிரதிவாதிகள் மற்றும் செல்வாம்பாள் வகையறாவின் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதால் தான் நான் தனிப்பட்டா பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். என் கணவர் பெயருக்கு இருந்தது. மேற்படி ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும்.

(2) மேற்படி ஆவணங்களில் சாட்சியாக கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பக்கம் 3–ல் 2 வது பாராவில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் எனது கணவரும், அவரது சகோதரியும் மேஜர்களான உடன் அவர்கள் சுவாதீனத்தில் வைத்து சர்வசுதந்திரமாக அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசகங்களின் படி எனது கணவரும், அவரது சகோதரியும் மேஜரான பின்னிட்டு தாவாச் சொத்துக்களின் சுவாதீனத்தை 1977 ம் வருடமே அவர்கள் வசம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 1977 ம் ஆண்டு முதல் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள் சொத்துக்கள் எனக்கு எனது கணவர் எழுதி வைத்த தேதி வரை எனது கணவர் மற்றும் அவரது சகோதரி சுவாதீனத்தில் தான் பூமி இருந்தது என்றால்

சரிதான். எனது கணவரின் சகோதரி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 வது பக்கத்தில் 2004 ம் வருடம் எனது கணவரின் சகோதரி பாக விடுதலை ஆவணம் ஏற்படுத்திய பின்னிட்டு அதன் முழு சொத்துக்களும் எனது கணவர் பெயருக்கு கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

(3) வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூட்டுப்பட்டா என்று குறிப்பிடப்பட்டுள்ளது நான், பிரதிவாதிகள் மற்றும் செல்வாம்பாள் வகையறாவை சேர்த்து தான் கூட்டுப்பட்டா என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பு.ஏ.6.09 பூமியில் பு.ஏ.1.52 ¼ பூமியை செல்வாம்பாள் வகையறா நாளது தேதி வரை எந்த வில்லங்கமும் செய்யாமல் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை அவர்கள் பாகத்தை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். பு.ஏ.6.09 பூமியில் எனது கணவருக்கு பாத்தியப்பட்டது 1.52 ¼ பூமி தான் ஆனால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் கணவர் எனக்கு அதிகப்படியாக பு.ஏ.3.04 பூமியை எழுதிவைத்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அது என் கணவருக்கு வந்த பூமி ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 4 ல் பாகப் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை கூட்டு பாத்தியஸ்தர்களுடன் வாய் மொழியாக பாகம் பிரித்து என்று கண்டுள்ள நிலையில் யார், யார் கூட்டு பாத்தியஸ்தர்கள் என்றோ, எந்தெந்த சொத்துக்களைப் பொறுத்து எந்த வருடம் வாய் மொழியாக பிரித்தனர் என்பதை பொறுத்து குறிப்பிட்டு எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் 1977 ம் ஆண்டே சொத்து குறித்து ஆவணம் ஏற்படுத்திவிட்டார்கள். அது என்ன ஆவணம் என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

(4) என் கணவரே வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாய் மொழியாக பாகம் பிரித்ததாக தெரிவித்துள்ள நிலையில் நான் மேற்படி வாய்மொழி பாகம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று முன்னுக்கு பின் முரணாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து தாவா 9 வது பாராவில் வாய்மொழியாக பாகம் பிரித்ததாகவும், எனது முதல் விசாரணை பாரா 9 ல் வாய் மொழியாக பரிவர்த்தனை செய்திருப்பதாக முன்னுக்கு பின் முரணாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வாய் மொழியாக பாகம் செய்து அதன் அடிப்படையில் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம். வாய் மொழியாக பாகம் பிரித்தது சம்மந்தமாக எந்த ஆதாரமும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.497/7

காலையில் உள்ள பு.ஏ.3.04 ½ பூமியைப் பொறுத்து தவறான செக்கு பந்தி கண்டு சொத்து விவரம் எனக்கு என் கணவரால் ஏற்படுத்தப்பட்டு என்றால் சரியல்ல. என் கணவருக்கு வந்தது தான் எனக்கு செட்டில்மெண்ட் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் செக்கு பந்தி கண்டு குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் குறித்து அதற்கு முன்பு எந்த ஆவணத்திலும் செக்கு பந்தி கண்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்வில்லை என்றால் சரியல்ல துரைசாமி கவுண்டருக்கு ஏற்படுத்திய பதிவு குத்தகை ஒப்பந்தத்தில் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள செக்கு பந்தி கண்டு எழுதப்பட்டுள்ளது அதில் பழனிச்சாமி கவுண்டர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். பு.ஏ.6.09 பூமியில் மொத்த பூமிக்கும் நுழைவு வாயில் உடுமலை – தாராபுரம் ரோட்டிலிருந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. ஜெயந்தி, பொன்மணிக்கு அவர்கள் பங்கு பூமிக்கு அருகிலேயே வேறு பூமி உள்ளது. அதன் வழியாக அவர்களுக்கு நுழைவாயில் உள்ளது. மேற்படி விவரம் குறித்து எனது வழக்கிலும், தாவாச் சொத்தின் மூல ஆவணங்களிலும் குறிப்பிடவில்லை என்றால் இது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார வழக்கு என்பதால் அது சம்மந்தமாக நான் குறிப்பிடவில்லை.

(5) மேற்படி பு.ஏ.06.09 பூமியில் முன் பாத்தியஸ்தர்கள் ஆவணங்களில் நான் குறிப்பிட்ட வேறு வழித்தடம் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகளுக்கு வேறு பூமியின் வழியாக தடம் இருப்பதை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி தடம் சம்மந்தமாக பிரதிவாதிகள் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்த கூடுதல் விபரப்பத்திரிக்கையில் பு.ஏ.06.09 பூமிக்கு உடுமலை – தாராபுரம் ரோட்டின் வழியாக தான் நுழைவு வாயில் உள்ளது ஆனால் நான் ரோட்டின் மேல் உள்ள பாகத்தை நான் செட்டில்மெண்ட் எழுதி பெற்றது சரியல்ல என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் பிரதிவாதிகள் பூமிக்கு அருகிலேயே அவர்களுக்கு மற்றொரு பூமி உள்ளது. மேற்படி விவரத்தை குறிப்பிட்டு பிரதிவாதிகளின் பங்கு பூமிக்கு அருகில் வேறு பூமி வழித்தடம் உள்ளது என்று நான் குறிப்பிட்டு நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(6) பு.ஏ.06.09 பூமியை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டுஅறிக்கை தாக்கல் செய்யக் கோரி பிரதிவாதிகள் இடைநிலை மனு எண். 01/2023 தாக்கல் செய்து

என்னுடைய கடுமையான ஆட்சேபணைக்கு பிறகு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். உண்மையிலேயே பிரதிவாதிகளுக்கு வேறு தடம் இருந்திருந்தால் நான் மேற்படி வழக்கறிஞர் ஆணையர் மனுவை ஆட்சேபணை செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதி குறித்து ஏற்கனவே ஜெயந்தி, பொன்மணி வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடியாகிவிட்டதால் தான் ஆட்சேபணை செய்தேன். என்னிடம் காட்டப்படும் க.ச. 497/7 காலையின் கணிணி சிட்டா என்றால் சரிதான். **06.07.2012 தேதியிட்ட க.ச.எண்.497/7 ன் கணிணி சிட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(7) மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் பிரதிவாதிகள் மற்றும் செல்வாம்பாள் வகையறா பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. க.ச.497/7 ல் உள்ள பு.ஏ.06.09 ல் பிரதிவாதிகள் அவர்களுக்குரிய பாகமான பு.ஏ.03.04 ½ பூமியை பாகம் பிரித்து தரக் கோரி அவர்கள் வழக்கறிஞர் மூலமாக எனக்கும், செல்வாம்பாள் வகையறா, வட்டாட்சியர் ஆகியோருக்கு கடந்த 10.07.2012 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அந்த மாதிரி எதுவும் வரவில்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **14.07.2012 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 10.07.2012 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை தான் பி.வா.சா.ஆ.8 ஆவணம் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் எனது தரப்பில் ஏற்கனவே சொத்துக்கள் பாகம் பிரித்து செக்கு பந்தி கண்டு என்னுடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(8) பிரதிவாதிகள் 14.07.2012 ம் தேதி பு.ஏ.06.09 பூமியில் உள்ள பொது கிணற்றை எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று எனக்கும், மின் வாரிய அதிகாரிகளுக்கும் என்று குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். **14.07.2012 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னிட்டு நான் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் அனுப்பிய

வழக்கறிஞர் அறிப்பிற்கு எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பாத காரணத்தினால் பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுக்கவில்லை என்பதால் அதை நான் ஏற்றுக்கொண்டதாக தான் கருத வேண்டும் என்றால் சரியல்ல. நாளது தேதி வரை பு.ஏ.06.09 பூமிகள் பொதுவாகவும், கூட்டாகவும் நான், பிரதிவாதிகள் மற்றும் செல்வாம்பாள் வகையறா ஆகியோர் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது தனிப்பட்ட சுவாதீனத்தில் தாவா பூமி இருந்ததில்லை என்றால் சரியல்ல எனது சுவாதீனத்தில் தான் இருந்தது. பு.ஏ.06.09 பூமியை பாகம் பிரித்து தரக்கோரி பிரதிவாதிகள் உடுமலை மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 156/2012 என்ற எண்ணில் என் மீதும், என் கணவர் மீதும்,செல்வாம்பாள் வகையறாவிற்கு எதிராக பாக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். **அசல் வழக்கு எண். 156/2012 பாக வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(9) உடுமலை மாண்பமை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.156/2012 வழக்கில் நான் பதில் விபரப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். **அசல் வழக்கு எண். 156/2012 பாக வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்த பதில் விபரப்பத்திரிக்கை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பாக வழக்கில் எனது தரப்பில் எனது கணவர் சின்னச்சாமியும், ஒரு சபாபதி என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்கள் என்றால் சரிதான்.

உணவு இடைவேளைக்காக வழக்கின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(10) மேற்படி அசல் வழக்கு எண்.156/2012 ன் சாட்சியாக விசாரிக்கப்பட்ட சபாபதி எனது தங்கையின் கணவர் ஆவார். மேற்படி சபாபதி தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அதன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக இந்த வழக்கின் பிரதிவாதிகள் மேல் முறையீடு செய்து அது மாண்பமை உடுமலை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மே.வ.எ.64/2021 வழக்கு உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு விசாரணைக்கு எனது தரப்பில் தயாராகவில்லை என்ற காரணத்தினால் முடித்து வைக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. உண்மையில்

பிரதிவாதிகள் எனது சுவாதீனத்தில் இடைஞ்சல் செய்திருந்தால் நான் மேற்படி இடைக்கால மனுவை மேல் நடத்தியிருப்பேன் எந்த தொந்தரவும் செய்யாததால் இடைக்கால மனுவை மேல் நடத்தவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை பிரதிவாதிகள் எங்கள் பூமிக்குள் அத்து மீறி நுழைந்து பிரச்சனை செய்ததால் தான் தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் எந்த காலத்திலும் தாவாச் சொத்தில் நுழைந்து இடையூறு செய்ததில்லை கூட்டு சுவாதீனத்தில் உள்ளதால் இடையூறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது. பிரதிவாதிகள் அத்து மீறி எங்கள் சுவாதீனத்தில் நுழைந்து பிரச்சனை செய்ததை நிரூபிக்க காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளோம் அந்த புகாரின் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேலும் பிரதிவாதிகள் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை செய்து எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யாததால் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். க.ச.06.09 பூமி நாளது தேதி வரை எனது, பிரதிவாதிகள் மற்றும் செல்வாம்பாள் வகையறா கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது அவர்களும் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் எனது பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் என் கணவர் உரிமையில்லாத சொத்தை எனக்கு எழுதி வைத்துள்ளதால் சட்டப்படி செல்லத்தக்கததல்ல என்றால் சரியல்ல. மேல் முறையீட்டு வழக்கு 64/2021 நிலுவையில் உள்ள நிலையில் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.29 16:03:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்